# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 14.05.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# மட்டக்களப்பில் அல்பா வேரியன் கண்டுபிடிப்பு
# பல பகுதிகளுக்கு பரவியிருக்கலாம் என அச்சம்

## தொடரும் தொற்று அதிகரிப்பு
## 3 இலட்சம் தடுப்பூசிகள் தேவை
## வெளியில் வருவதை தவிருங்கள்
## மட்டக்களப்பு மக்களுக்கு அறிவுறுத்தல்

(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் யுகே வேரியன் எனப்படும் அல்பா வேரியன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவை மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவியிருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோயியலாளர் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் வே.குணராஜசேகரம் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## கோரோனா அச்சத்தில் ஏறாவூர்
## ஒரேநாளில் 8 பேர் மரணம்
## படையினர் வீதிகளில் களமிறக்கம்



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

ஏறாவூர் பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துச் செல்வதையடுத்து பொலிஸ் மற்றும் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் விசேட படையினரும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பு மாவட்டத்தில்
## 19959 பேருக்கு தடுப்பூசிகள் வாகரைக்கு 274



(வேதாந்தி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த எட்டாம் திகதி முதல் நேற்று வரை மொத்தமாக 19959பேருக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் டாக்டர்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில்
## 713 தோற்றாளர்கள் 20 பேர் மரணம்

(எருவில் துசி)

கிழக்கு மாகாணத்தில் இந்தவாரம் கொவிட் தொற்று காரணமாக அதிக ஆபத்து நிறைந்த பகுதிகளாக ஏழு சுகாதாரப்பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.இந்த ஏழு பிரிவுகளும் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரத்

02 ஆம் பக்கத்தில்...

## காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் மேலும்
## மூவருக்கு கோரோனா தொற்று

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் மேலும் மூவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர். இவர்களுள் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் இரு சிவில் பாதுகாப்பு படைவீரர்களுமாவர் ;

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் 55757 பேருக்கு கோவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது



( எருவில் துசி)

கிழக்கு மாகாணத்தில் கடந்த எட்டாம் திகதி முதல் நேற்று (13)வரை 55,757 பேருக்கு கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதாரதிணைக்களதகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திருகோணமலையில் 16,063, மட்டக்களப்பு 19,959, அம்பாறை 19,464 என தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளது.

## காரைதீவில் முதலாவது கொரோனா மரணம்!



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனைப் பிராந்தியத்திலுள்ள காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் முதலாவது மரணம்

02 ஆம் பக்கத்தில்...






## எரிபொருள் விலையை அதிகரிக்க பிரதமரே அனுமதி வழங்கினார்



ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் இணைந்தே எரிபொருள் விலையை அதிகரிக்கும் தீர்மானத்தை எடுத்ததாகவும், இதற்கு

02 ஆம் பக்கத்தில்...

## கோரமான ஆட்சியினை கைவிடாவிட்டால் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம்



(யாழ்கீதன்)

தற்போதைய ஆட்சியாளர்கள் தமது கோரமான ஆட்சியினை கைவிடாவிட்டால் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடாத்திய ஊடகவியலாளர்

02 ஆம் பக்கத்தில்...






## தமிழர் பகுதிகளை ஆக்கிரமிக்கவே கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் சிலர் தடையாக உள்ளனர்



(சந்திரன் குமணன்)

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பெரியநீலாவணை2 கிராமத்தில் அரச காணிக்குள் மண் இட்டு நிரப்பி சலவை தொழிலாளிகள் தொழிலை மேற்கொள்ளும் தோணா

02 ஆம் பக்கத்தில்...






## பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும்போது குழந்தை மருத்துவர்களின் உதவியை பெறுமாறு பிரதமர் ஆலோசனை

கொவிட்19 தொற்று காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் திறக்கும் போது பிள்ளைகளின் நோய்கள் மற்றும் பிரச்சினைகளை கண்டறிய குழந்தை மருத்துவர்களின் உதவியை

02 ஆம் பக்கத்தில்...











## போதைபொருட்களை வைத்திருந்த 10 பேர் ஏறாவூரில் கைது

(ஏறாவூர் நிருபர்)

பயணக்கட்டுப்பாடு அமுல் செய்யப்பட்டுள்ள நிலையில் கேரள கஞ்சா மற்றும் ஹெரோயின் ஆகிய போதைப்பொருட்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பத்துப் பேர்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 19959 பேருக்கு

நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் கொவிட்-19 தொற்றுக்கு எதிராக சைனோபார்ம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் நேற்றும் ஆறாவது நாளாக 3550 பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது

இதுவரை தரவுகளின்படி பின்வரும்சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் குறிப்பிட்ட ஊசிகள் வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு 3553 , ஏறாவூர் 2396 ,

செங்கலடி 1630 ,கிரான் 840, வாழைச்சேனை 1306 , கோறளைப்பற்று 1235 , ஓட்டமாவடி 2250 , வாகரை 274, காத்தான்குடி1828 , ஆரையம்பதி 1030 , களுவாஞ்சிக்குடி 1544 , வெல்லாவெளி 590, பட்டிப்பளை 898, வவுணதீவு 586 பேருக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆறாம் திகதிமுதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்பட்ட கொவிட் தொற்று நேற்று குறைவடைந்துள்ளதாகவும் நேற்றைய தொற்றுக்களின் எண்ணிக்கை 67 எனவும் ஆகக்குடுதலான தொற்றாக செங்கலடிப்பிரிவில் 15 தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொரோனா அச்சத்தில் ஏறாவூர் ஒரேநாளில்

ஏறாவூர்ப் பிரதேசத்தில் கொவிட்19 தாக்கத்தினால் 8 பேர் மரணமடைந்துள்ளதுடன் ஒரேநாளில் முப்பதிற்கு மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து ஏறாவூர் நகர பிரதேசத்தின் ஒரு பகுதி முடக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் படையினரும் பொலிஸாரும் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் முடக்கப்பட்ட பகுதியில் வீட்டைவிட்டு வெளியேறுவோரைக் கண்காணிப்பதுடன் வீதிகளில் அவசியமற்றமுறையில் நடமாடும் நபர்களைக்கைது செய்து பீசீஆர் பரிசோதனைக்கு முன்னிலைப்படுத்துகின்றனர்.

இதேவேளை ஏறாவூர் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் பீசீஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருவதாக வைத்தியதிகாரி சாபிறா வசீம் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் 713 தொற்றாளர்கள்




திணைக்களத்தின் கொவிட் சம்பந்தமான விபரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரவுகளின்படி காத்தான்குடி (126), கோறளைப்பற்று மத்தி (119 ), ஏறாவூர் (114), மட்டக்களப்பு (67), ஓட்டமாவடி(57), களுவாஞ்சிக்குடி (57), ஆரையம்பதி (53) என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை மாகாணத்தில் கடந்த ஏழு நாட்களில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக தொற்றாளர்களாக 713பேர் இனங்காணப்பட்டுள்ளதுடன் 20பேர் மரணத்தை தழுவியுள்ளனர்.

ஏனைய பிராந்தியங்களில் திருமலை தொற்றாளர்கள் 204 மரணம் 12, அம்பாறை தொற்றாளர்கள் 66 மரணம் 03, கல்முனை தொற்றாளர்கள் 179 மரணம் 12 என பதிவாகியுள்ளது.

கொவிட் தொற்று காரணமாக கிழக்கு மாகாணத்தில் இதுவரை 11275பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன் 221பேர் மரணித்துள்ளனர்.







## போதைபொருட்களை வைத்திருந்த 10 பேர் ஏறாவூரில் கைது

ஏறாவூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸ் ஊழல் ஒழிப்புப்பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் எச்.எம்.ஷியாம் தெரிவித்தார். கஞ்சா வைத்திருந்தவர்கள் புன்னக்குடா மற்றும் செங்கலடி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டவர்கள் கம்மின்குடா மற்றும் மிச்நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது.

## காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் மேலும் மூவருக்கு

இம்மாத ஆரம்பத்தில் இப்பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 32 பொலிசாருக்கு கொரோனா தொற்று உறுயானதையனதுடன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் கொரோனா தொற்றினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். கடமையிலிருந்த ஏனைய பொலிஸ் உத்தியோகதர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று உறுதியானதால் பொலிஸ் நிலையத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம் பெற்று வருகின்றன.

## பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும்போது குழந்தை

பெறுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக் கல்வி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கொவிட் நோய் எதிர்ப்பு தடுப்பூசிகளை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தி அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொவிட் தொற்று நிலைமை கட்டுப்படுத்தப்பட்ட பின்னர் உடனடியாக கட்டம் கட்டமாக பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதன் முக்கியத்துவம் குறித்து சுட்டிக்காட்டிய பிரதமர், ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை சுகாதார அமைச்சின் ஊடாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என சுட்டிக்காட்டினார்.

குறித்த கலந்துரையாடலில் கலந்துக் கொண்ட குழந்தை மருத்துவர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் பாடசாலைகளை மீள திறக்கும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு தமது சங்கத்தின் ஆதரவை கல்வி வலய மட்டத்தில் பெற்றுக்கொடுக்க முடியும் என கௌரவ பிரதமர் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது.

இப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சுமார் இரண்டு இலட்சத்து எழுபத்து ஒன்பது ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் சுமார் மூன்று இலட்சம் கல்விசாரா ஊழியர்கள் உள்ளிட்டோருக்கு தடுப்பூசி வழங்குவதன் முக்கியத்துவமும் பேராசிரியர் கபில பெரேரா அவர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.

பாடசாலை ஆரம்பிக்கும்போது மாணவர்களும் ஆசிரியர்களும் பாதுகாப்பான முறையில் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவது தொடர்பான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும் என்று தெரிவித்த கௌரவ பிரதமர். பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து நடவடிக்கையின் போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

## காரைதீவில் முதலாவது கொரோனா மரணம்!

சனிக்கிழமை அதிகாலை சம்பவித்துள்ளது.

காரைதீவு.4ஐச் சேர்ந்த விநாயகமூர்த்தி சத்தியசீலன் என்பவரே இவ்விதம் கொரோனாவினால் உயிரிழந்துள்ளார்.

53 வயதுடைய குடும்பஸ்தரான இவர் கடந்த 4ஆம் திகதி மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு சிகிச்சை நிமித்தம் சென்றபோது மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் சோதனையின்போது தொற்றாளராக இனங்காணப்பட்டதையடுத்து கரடியனாறு கொவிட் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.அங்கு இருந்தவேளை மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் காரைதீவு பிரதேச சபைஊழியர் விநாயகமூர்த்தி சுரேந்திரன் கடந்த (10) அதிகாலை 2.00 மணியளவில் கொரோனாவின் கொடும்பிடியில் சிக்கி உயிரிழந்துள்ளார். இவர் காரைதீவில் பிறந்து அட்டப்பள்ளத்தில் திருமணம் செய்து அங்கு வாழ்ந்துவந்தவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் விலையை அதிகரிக்க பிரதமரே அனுமதி வழங்கினார்

நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எழுத்து மூலம் அனுமதி வழங்கியதாகவும் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதனால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகரகாரியவசம் வெளியிட்டுள்ள அறிக்கையானது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கே எதிரானது என்று உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமையை கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருந்த ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சகால காரியவசம், இந்த விடயத்திற்கு பொறுப்பேற்று உதய கம்மன்பில பதவி விலக வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார்.

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் அனைவரும் இணைந்தே தீர்மானத்தை எடுத்தார்கள். அது தொடர்பாக அமைச்சரவை உப குழுவொன்றும் அமைக்கப்பட்டது. அதன்படி எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு பிரதமர் எழுத்து மூலம் அனுமதியையும் வழங்கியிருந்தார் என்று உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதனால் தான் பதவி விலக வேண்டிய அவசியமில்லை என்றும், ஜனாதிபதி, பிரதமரின் தீர்மானத்தை எதிர்க்கும் அவர்களின் கட்சி செயலாளரான சாகர காரியவசமே பதவி விலக வேண்டும் என்றும் கம்மன்பில இதன்போது கூறியுள்ளார்.

## தமிழர் பகுதிகளை ஆக்கிரமிக்கவே கல்முனை வடக்கு பிரதேச செயலக

பகுதியினையும் ஆக்கிரமிப்பு செய்யும் நடவடிக்கையில் சில நபர்கள் ஈடுபட்டு வந்தனர். இது தொடர்பில் அப்பிரதேச மக்களினால் தெரிவிக்கப்பட்டதையடுத்து குறித்த இடத்திற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலாளர், கல்முனை மாநகர ஆணையாளர் ஆகியோரை தொடர்பு கொண்டு மேற்படி விடயத்தினை தடுத்து நிறுத்தியதோடு, ஆக்கிரமிப்பாளர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுப்பதற்குரிய செயற்பாடுகளையும் மேற்கொண்டார்.

இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில்,

பெரிய நீலாவணை பிரதேசத்தில் அரச காணிக்குள் அத்துமீறி அதனைக் கையகப்படுத்தும் செயற்பாடுளை சகோதர இனத்தவர்கள் மேற்கொண்டதோடு அங்கு சலவைத் தொழில் செய்யும் தொழிலாளர்களினால் பயன்படுத்தப்பட்டு வரும் தோணாவும் மண்ணிட்டு நிரப்பப்பட்டு அபகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. பிரதேச மக்களினால் வழங்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து என்னால் அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுத்து அதனைத் தடுத்து நிறுத்த முடிந்தது. அப்பிரதேச மக்களின் விரைவான செயற்பாட்டின் மூலம் இதனைத் தடுக்க முடிந்தது. ஆனால் இது போன்ற பல செயற்பாடுகள் எமது மாவட்டத்தில் இடம்பெறுகின்றன. இவை அனைத்தும் தடுக்கப்பட வேண்டும்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படும் விடயத்தில் பல பிரயத்தனங்களை மேற்கொண்டு வரும் வேளையில் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றனர் அவ்வாறிருக்கையில் தமிழர் பிரதேசங்களில் இவ்வாறான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களின் பின்புலங்கள் பலமாக இருப்பதன் காரணமாகவே இவர்களால் இவ்வாறான காரியங்களைச் செய்ய முடிகின்றது.இவ்வாறான செயற்பாடுகள் கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயார்த்தல் விடயத்தில் முஸ்லீம் அரசியல்வாதிகள் ஏன் முட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள் என்பதனை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. தமிழர் பிரதேச காணிகளை அபகரிப்பதற்காகவே கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயங்களில் முஸ்லிம் அரசியல் வாதிகள் தடையாக உள்ளார்களா? என்கின்ற சந்தேகங்களும் எழுகின்றன. இவ்வாறான நில ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். இது தொடருமாயின் கட்டியெழுப்பப்பட வேண்டிய இரு இனங்களின் ஒற்றுமை சீர்குலையும் நிலைமையே உருவாகும் என இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

குறித்த இடத்தினை பார்வையிட்டு கொண்டிருக்கும் போதே முச்சக்கர வண்டியில் தென்னை ஓலைகளை ஏற்றி வந்து வேலியிடும் நடவடிக்கையில் ஈடுபட்ட சிலர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

## கோரமான ஆட்சியினை கைவிடாவிட்டால் அரசாங்கத்தை வீட்டுக்கு

சந்திப்பின் போதே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கமானது மக்கள் மீது அடக்குமுறைகளை வன்முறைகளைப் பிரயோகித்து மக்களை அடக்கியாள நினைக்கின்றது அதாவது குடும்ப ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு பாடுபடுகிறது, அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த அரசாங்கம் எதிர்காலத்திலாவது சரியான முறையில் செயற்படாவிட்டால் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் செயற்பாட்டில் நாங்கள் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அதற்குரிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம்.

எனவே இந்த அரசாங்கமானது கடும்போக்கை கைவிட்டு அடக்குமுறையை விட்டு குடும்ப ஆட்சி முறையினையும் கைவிட்டு செயற்பட வேண்டும். குடும்ப ஆட்சி தொடரக்கூடாது, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளினுடைய பங்களிப்போடு அது எதிர்க்கட்சியாக இருந்தாலும் அவர்களுடன் சேர்ந்து ஆட்சி நடாத்துவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் . தற்போதுள்ள கொரோனா நிலைமையினை கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசாங்கத்தினால் எந்தவிதமான தகுந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. பயணத்தடை என்கின்றார்கள், ஊரடங்கு என்கிறார்கள் ஆனால் ஒழுங்கான நடைமுறை பின்பற்றப்படவில்லை.

வீதிகளில் மக்கள் பயணிக்கிறார்கள், அத்தியாவசிய தேவை எனக் கூறி அனைவரும் வீதிகளில் நடமாடுகிறார்கள். எனவே இந்த அரசானது இந்தக் கொடிய நோயை கட்டுப்படுத்துவதற்கு தகுந்த எந்த நடவடிக்கையினையும் எடுக்கவில்லை.

அதற்குரிய பொறுப்பினை சம்பந்தப்பட்ட தரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது சுகாதார அமைச்சு மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட இணைந்த அமைச்சுகளும் இந்த விடயம் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும். சுகாதார அமைச்சுக்குள்ள அதிகாரத்தினை வேறு யாராவது பாவிக்கிறார்களா?

அல்லது வேறு என்ன நடைபெறுகின்றது என்பது எமக்கு புரியவில்லை. ஆனால் இந்த விடயங்கள் தொடர்பில் யாராவது ஒருவர் பொறுப்புக்கூற முன்வரவேண்டும்.

இல்லையென்றால், அவர்கள் மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக தங்களின் பதவிகளை ராஜினாமா செய்யலாம் எனத் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் அல்பா வேரியன் கண்டுபிடிப்பு பல பகுதிகளுக்கு

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் தொகை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது.அது குறைவதற்கான அறிகுறிகளை காணவில்லை. எமது மாவட்டத்தில் யுகே வேரியன் எனப்படும் அல்பா வேரியன் ஜெயவர்த்தன பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தடுப்ப மருந்துதானது மட்டக்களப்பு மாவட்டத்தின் 14சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் உள்ள அதிகூடிய அச்சுறுத்தல் உள்ள பகுதியில் உள்ள 60வயதுக்கு மேற்பட்டவர்கள்,முன்னிலையில் மக்களுடன் களத்தில் பணியாற்றுபவர்கள், முதியோர் இல்லங்களில் உள்ளவர்கள் போன்றவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுவருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் வழங்கக்கூடியளவில் தடுப்பு மருந்து கிடைக்கவில்லை.25000தடுப்பு மருந்துகளே கிடைக்கப்பெற்றுள்ளன.மட்டக்களப்பு மாவட்டத்தில் 30வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் தடுப்பூசி வழங்கவேண்டுமானால் சுமார் மூன்று இலட்சம் தடுப்பூசிகள் தேவைப்படும்.மேலதிகமானதடுப்பு மருந்துகள்கிடைக்கப்பெறுமிடத்து அனைவருக்கும் தடுப்பு மருந்துகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரனா தொற்றினை கட்டுப்படுத்துவதற்கான பிரதான வழியாக முகக்கவசம் அணிதல்,சமூக இடைவெளியை பேணுதல், கைகளை அடிக்கடி சுத்தம் செய்தல் போன்றவற்றை பொதுமக்கள் பின்பற்றாத வரையில் இந்த நோயின் தாக்கம் அதிகரித்துதான் செல்லும்,இறப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்துதான் செல்லும். மட்டக்களப்பு மாவட்ட மக்களிடம் வினயமாக கேட்டுக்கொள்வது தேவையற்ற வகையில் வெளியில் வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்,முகக்கவசத்தினை அணிந்து கொள்ளுங்கள், பொருட்களை வாங்கி வீடுசென்றவுடன் கைகளை சவர்க்காரமிட்டு கழுவிக்கொள்ளுங்கள்.

தடுப்பூசி ஏற்றபடுவதனால் சாதாரண பக்கவிளைவுகளோ பாராதூரமான பக்கவிளைவுகளோ எங்களுக்கு பதிவாகவில்லை.அதனால் கர்ப்பிணி தாய்மார்களுக்கு தடுப்பூசிகளை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு பரிந்துரை செய்துள்ளது.அதனால் தொற்று அதிகமாகவுள்ள பகுதிகளில் வாழும் கர்ப்பிணி பெண்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட்டினால் கர்ப்பிணி தாய்மார்களின் இறப்புகளின் எண்ணிக்கையானது குறிப்பிட்ட வீதத்தில் அதிகரித்துள்ளது.

யுகே வேரியன் எனப்படும் அல்பா வேரியன் மட்டக்களப்பு கல்லடி பகுதியிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.இது கல்லடியில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்காக மற்ற இடங்களில் இல்லையென்று சொல்லமுடியாது. மட்டக்களப்பின் வேறு பகுதிகளிலும் பரவியிருப்பதற்கான வாய்ப்புகள் கூடுதலாக உள்ளது.

பொதுமக்களை அவதானமாகவும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றியவாறும் நடந்துகொள்ளுமாறும் அநாவசியமாக வெளியில் நடமாடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பென்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen


Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# மலையக மக்களையும் ஒடுக்கும் செயற்பாடுகளைஅரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

'மலையக மக்களையும் ஒடுக்கும் செயற்பாடுகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இந்நிலைமையை உணர்ந்து, தங்களது அரசியல் நிலைப்பாட்டை மாற்றி பொதுவான தொரு நிலைப்பாட்டுக்கு மலையக தலைமைகள் வரும் பட்சத்தில் அவர்களுடன் இணைந்து செயற்படுவதில் எவ்வித தடையும் கிடையாது' என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மஸ்கெலியா பகுதிகளில் உள்ள சுமார் 600 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தினை தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்திருந்தது.

இவ் நிவாரண பொருட்களை வழங்கி வைத்ததன் பின் சமகால அரசியல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதே எமது கருத்தாகும். மலையக மற்றும் முஸ்லிம் தலைமைகளுடன் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகள் கடந்தகாலங்களிலும் முன்னெடுக்கப்பட்டன. எனினும், கொள்கை ரீதியிலான முரண்பாட்டால் பொதுவானதொரு நிலைப்பாட்டுக்கு வரமுடியவில்லை என சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு, கிழக்கில் வாழும் ஈழத் தமிழ் மக்கள் கடந்த 73 ஆண்டுகளாக எவ்வாறெல்லாம் குறிவைக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டனவோ, மேற்படி அனைத்து நடவடிக்கைகளும் இன்று மலையக மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

எனவே, இந்நிலைமையை உணர்ந்து, மலையக மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைகள், வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களோடு ஒரு பொதுநிலைப்பாட்டை எடுத்து, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ளும் விதத்தில் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டால் இணைந்து செயற்படுவதில் எந்த பிரச்சினையும் இல்லை.

அதேவேளை, கடந்த அரசின் பொருளாதாரமோசடி உள்ளிட்ட குறைப்பாடுகளை சுட்டிக்காட்டி, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரம் மேம்படும் என்ற உறுதிமொழியை வழங்கியே தற்போதைய ஆட்சியாளர்கள் சிங்கள மக்கள் மத்தியில் அமோக வெற்றி பெற்றனர். ஆனால் அரசின் செயற்பாடுகள் கடும் ஏமாற்றமாக உள்ளன' என்றார்.

# ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்பட்டு சமஷ்டி அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும்

## செல்வராசா கஜேந்திரன் எம்.பி தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்பட்டு சமஷ்டி அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும். அதற்காகவே நாம் போராடி வருகின்றோம். சமஷ்டி முறை வருகின்றபோது மலையக மக்களின் இருப்பும் பாதுகாக்கப்படும் என்று தமிழ் தேசியக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மஸ்கெலியா பகுதிகளில் உள்ள சுமார் 600 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தினை தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்திருந்தது.

இவ் நிவாரண பொருட்களை வழங்கி வைத்ததன் பின் சமகால அரசியல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து குரல் கொடுத்தோம். அதேபோல மலையக மக்களுக்கான காணி மற்றும் அரசியல் உரிமைகளுக்காகவும் குரல் கொடுப்போம்.

இந்நாட்டில் ஒற்றையாட்சி முறையை ஒழிக்கப்பட்டு சமஷ்டி முறையை உருவாக்கும் அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும். அதற்காகவே போராடி வருகின்றோம். அவ்வாறு சமஷ்டி முறை வருகின்ற போது மலையக மக்களின் இருப்பும் பாதுகாக்கப்படும். மலையக மக்களுடன் இணைந்து பயணிக்க நாம் தயார்.

கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, சீனாவின் முகவர்களாக செயற்பட்டு நாட்டின் வளங்களை விற்கின்றது. பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு உயரும் வகையில் செயற்பட்டு வருகின்றது. மக்கள் நலன் பற்றி சிந்திப்பதில்லை. அவ்வாறு சிந்தித்திருந்தால் இவ்வாறு எரிபொருட்களின் விலை உயர்வடைந்திருக்காது.

செலன இணைந்த நிறுவன திட்டத்தின் ஊடாக கொழும்பிலுள்ள அசையும் மற்றும் அசையா சொத்துகளை சீனாவுக்கு வழங்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. தென் பகுதியை தாரை வார்ப்பது மட்டுமல்லாமல் வடக்கில் 7 ஏக்கர் காணியிலுள்ள ஜனாதிபதி மாளிகையும் குத்தகைக்கு வழங்க முயற்படுகின்றனர் என்றார்.

# கொவிட்- 19 காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள்

(ரக்ஸனா)

கொவிட் - 19 காரணமாக அமுலிலுள்ள நடமாட்டத் தடை காரணமாக அன்றாடம் நாட்கூலி வேலைசெய்து அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் தமது கடும்பத்தைப் பாதுகாத்துவரும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்று பிரதேசத்திற்குட்பட்ட பொரியபோரதீவு கிராமதிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட நாட் கூலி வேலை செய்யும் பொதுமக்களுக்குமாக சனிக்கிழமை மாலை ஸ்ரீ லங்கா பொது ஜனப் பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமார் அவர்களின் ஏற்பட்டில், அக்கட்சியின் மாவட்ட மகளிர் அணித் தலைவி திருமதி.ச.காந்தரூபி அவர்களினால் உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைக்கப்பட்டன.

கொவிட் - 19 நிலமையால் நடமாட்டத்தடை உத்தரவுக்கமைய வாழ்வாதாரங்களை இழந்துள்ள பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு இதன்போது உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.





# வாழைச்சேனை வைத்தியசாலையில் நடைபெறும் பிறப்பு ,இறப்பு தொடர்பான பதிவுகள் மீண்டும் ஓட்டாமாவடி பிரதேச செயலகத்தில்

(முர்சித்)

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் நடைபெறும் பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான பதிவுகள் மீண்டும் ஓட்டாமாவடி பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் நடைபெறும் பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான பதிவுகள் ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் பதிவிடும் நடைமுறை இருந்தது இப்பதிவாளர் பிரிவை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் கடிதத்தின்படி 31.05.2021ம் திகதி வாழைச்சேனைப் பிரதேச செயலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

இதனை உடனடியாக இடை நிறுத்தி வழமை போன்று ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் பதிவாளர் பிரிவில் வைக்குமாறு பிரதேச முக்கியஸ்தர்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமடிடம் முன்வைத்த கோறிக்கையையடுத்து பாராளுமன்ற உறுப்பினரின் முயற்சியினால் கடந்த 04.06.2021ம் திகதி அரசாங்க அதிபரின் கடிதம் பதிவாளர் நாயகத்தினால் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டது.

மீண்டும் தொடர்ச்சியான அரசியல் தலையீட்டினால் 09.06.2021ம் திகதி பதிவாளர் நாயகத்தினால் மீண்டும் நிரந்தரமாக இரத்துச் செய்யப்பட்டு நிரந்தரத் தீர்வு கிடைக்க பெற்றுள்ளது.

மீண்டும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் இடம்பெறும் பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான பதிவுகள் அனைத்தும் ஓட்டமாவடி பதிவாளர் பிரிவில் தொடர்ந்தும் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயத்தில் முயற்சி மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டிற்கு கல்குடா முஸ்லிம் சமூகச் செயற்பாட்டாளர்கள் நன்றிகளை தெரிவிக்கின்றனர்.







# இம்ரான் எம்.பி. கட்டில்கள் அன்பளிப்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கொவிட் தொற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதிருகோணமலை மாவட்டத்தில் நிவாரண பணிகளை முன்னெடுத்துவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிண்ணியா, மூதூர் தள வைத்தியசாலைகளுக்கு தேவையான ஒருதொகை கட்டில்களை வைத்தியசாலை அத்தியட்சகர்களான டாக்டர் ஏ.எம்.எம். ஜிப்ரி மற்றும் டாக்டர். கயல்விழியிடம் கையளித்தார்.

# கொரோனா இறப்பு அதிகரித்ததற்கு அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகளே காரணம்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.



(வாஸ் கூஞ்ஞ)

தடுப்பூசி போடுவதன் மூலம் கொரோனா தொற்றுப் பரவலை தடுக்க முடியும் என உலக நாடுகள் தெரிவித்திருக்கின்றபோதும் இலங்கை அரசானது நாட்டை முடக்கி வைத்துக்கொண்டு மக்களுக்கான தடுப்பூசிகளை போடாது இருப்பதாலேயே இறப்பு, தொற்றாளர் தொகை அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதல இயத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை (13.06.2021) வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் மன்னாரிலுள்ள தனது அலுவலகத்தில் நடாத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்ததாவது

இந்த அரசாங்கமானது வருட இறுதிக்குள் பாரிய நிதி நெருக்குதலுக்குள் தள்ளப்படப் போகின்றது என நான் ஆருடமாகச் இங்கு சொல்லுகின்றேன். அதற்கான முதல்படி இந்த அரசால் கொண்டுவரப்பட்ட இன்றைய எரிபொருள் விலையேற்றமாகும்.

மிக மோசமான நிலையில் இந்த நாடு தற்பொழுது காணப்படுகின்றது. இந்த எரிபொருள் விலையேற்றமானது சிறு தொகையல்ல அதிகமான தொகையாக விலையேற்றப்பட்டுள்ளது.

இதனால் சாதாரண மக்கள் குறிப்பாக கடற்தொழிலாளர்கள் விவசாயிகள் அன்றாடம் உழைப்புக்காகச் செல்லும் மக்கள் எல்லோரும் இவ் எரிபொருள் விலையேற்றத்தால் மிகவும் பாரிய பிரச்சனைகளுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அரசானது தற்பொழுது வெளிப்படுத்துகின்ற தன்னை நியாயப்படுத்துகின்ற காரணங்களை எற்றுக்கொள்ள முடியாது. இந்த நாடு முடக்கப்பட்டுள்ள இந்த சூழ்நிலையில் அரசு எடுத்திருக்கும் இந்த முடிவை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இங்கு எரிபொருள் மட்டுமல்ல ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் விலை ஏறுவதற்கான ஒரு காரணமாக இது அமையப்போகின்றது. அன்றாடம் உற்பத்தி செய்யப்படும் பாண் உட்பட அனைத்து பொருட்களின் விலைகள் ஏறும் வாய்ப்பு ஏற்படும்.

இந்த அரசாங்கமானது அன்றாட வாழவுக்காக உழைக்கும் மக்களைப்பற்றி சிந்திக்கும் ஒரு அரசாங்கமாக இது அமையவில்லை. ஆகவே இந்த அரசானது சாமானிய மக்களின் நலன்கருதி இந்த விலையேற்றத்தை உடன் குறைக்க வேண்டும்.

நேற்றையத் தினம் (12.06.2021) கடலில் மூழ்கியுள்ள கப்பல் தொடர்பாக பிரதமர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றுள்ளது இதை நோக்கும்போது இவ் கப்பலின் நியாயப்பாட்டை வெளிப்படுத்துகின்ற ஒரு கூட்டமாகவே இது அமைந்துள்ளதை பார்க்கின்றோம்.

ஆனால் இந்த கப்பல் உள்வாங்கப்பட்டதால் பாதிப்படைந்தது இலங்கை மீனவ சமூகமே. இப்பொழுது இவ் மீனவ சமூகம் பெரியதொரு பின்னடைவை சந்திக்கப்போகின்றது வெளிச்சமாகியுள்ளது.

இவ் கப்பலால் மன்னார் வலைகுடாவிலும் தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பாதிப்டைந்துள்ளவர்களுக்கு வழங்கப்படும் 5000 ரூபா மூலம் இவ் பிரச்சனைகளை நிவர்த்தி செய்ய முடியாது.

எங்கள் மீனவ சமூகமானது இங்கு பிடிக்கப்படும் மீன்களை சர்வதேச ரீதியாக அனுப்பப்படுகின்றபோது இந்த சர்வதேசம் இந்த மீன்களை ஏற்றுக் கொள்ள முடியுமா என்ற அச்சத்தோடு இருந்து வருகின்றனர்.

ஆகவே இலங்கையிலிருந்து சர்வதேசத்துக்கு அனுப்பப்படுகின்ற மீன்கள் திருப்பி அனுப்பப்படும் என்ற ஒரு நிலைப்பாடும் தற்பொழுது காணப்படுகின்றது.

உள்ளதைச் சொல்லுங்கள் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் செயல்பாட்டில் இந்த அரசு முனைய வேண்டும். இந்த கப்பலை உள்ளெடுக்கப்பட்டதுக்கு காரணம் நிதியை பெறுவதற்கு என அமைச்சர் வாசுதேவநாணயக்கார தெரிவித்திருந்தார்.

அரசாங்கமானது சைனாவின் புதிய சிட்டி உருவாக்கத்தில் முனைப்புக் காட்டியது. இப்பொழுது இந்த கப்பல் வருவதற்கான காரணத்தை அமைச்சர் சொல்லியிருக்கின்றார். இவ்வாறு பணம் சம்பாதிக்கும் சூழலில் அரசு எமது மக்களை பழிக்கிடையாக்கின்ற நிலையை இந்த அரசு கொண்டிருக்கின்றது என்பதை இங்கு சுட்டிக்காட்டுகின்றேன்.

கொவிட் தொற்று நோயை கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த நாடு முழுவதும் முடக்கப்பட்டுள்ளது. ஆனால் முடக்கப்பட்ட நோக்கம் வெற்றிக் கொண்டதாக இல்லை.

இறப்பு, தொற்றாளர் தொகை அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது. ஆகவே இந்த நாடு தொடர்ந்து முடக்கப்படுகின்ற சூழ்நிலையில் மக்கள்தான பாதிப்படைந்து வருகின்றனர்.

இந்த முடக்கத்தின்மூலம் இவ் நோயிலிருந்து மக்கள் காப்பாற்றப்பட வேண்டுமானால் முதலில் அனைவருக்கும் தடுப்பூசி போட வேண்டும் இதைத்தான் உலக நாடுகள் அனைத்தும் செய்கின்ற நிலைப்பாடு.

ஆனால் நாட்டை முடக்கிவிட்டு மக்களுக்கு தடுப்பூசி வழங்காது இறப்புக்களையும் தொற்றாளர்களையும் தொடர்ந்து அதிகரிக்கும் நிலைப்பாட்டிலேயே இவ் அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

இது இந்த அரசு வேற்று மனப்பான்மையுடன் செயல்படும் செயலா என நான் இந்த நேரத்தில் கேள்வி எழுப்பி நிற்கின்றேன். யாழ்ப்பாணத்தில் அதிகமான தொற்றாளர்கள் காணப்படுவதால் அங்கு கட்டாயம் இவ் தடுப்பூசி வழங்கியே ஆக வேண்டும்.

இன்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு முடக்கப்பட்டுள்ளது. இந்த புதுக்குடியிரப்பு ஆடைத்தொழிற்சாலையால்தான் இவ் தொற்று அதிகமாக அங்கு பரவும் அபாயத்தை நோக்கி செல்லுகின்றது. ஆனால் இது இன்னும் தொடர்ந்து இயங்கி கொண்டிருக்கின்றது. இதற்கு என்ன காரணமோ எமக்குத் தெரியவில்லை.

தடுப்பூசியால் இவ் கொரோனா தொற்றை கட்டுப்படுத்தலாம் என உலக நாடு தெரிவித்து வருகின்ற நிலையில் இந்த அரசானது இலவசமாக கிடைக்கும் வரை பார்த்துக் கொண்டு இருக்கின்ற தொழிய பணம் கொடுத்து இவ் தடுப்பூசிகளை பெற்று மக்களுக்கு போட பின்நிற்பது ஏனோ என்ற கேள்வியாகவும் இருக்கின்றது என்றார்.

## கர்ப்பிணி தாய்மார்களும் பயமில்லாமல் கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளலாம்

### குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கொவிட்19 தடுப்பூசி சைனோபாம் முதலாவது டோஸ் ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று ஐந்தாவது நாளாக குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் ஏற்றப்பட்டு வருகிறது.

குறித்த தடுப்பூசி ஏற்றும் பணி குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.அஜீத் தலைமையில் இடம் பெற்று வருகின்றது. 60 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கு முதற்கட்டமாக இத் தடுப்பு மருந்து கொரோனாவில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் ஏற்றப்பட்டு வருகிறது.

இதன் போது ஊடகங்களுக்கு கொவிட்19 தடுப்பூசி தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.அஜீத் கொரோனா தடுப்பூசி ஏற்றலில் முதலாவது நாள் மக்களின் வருகை குறைவாக இருந்தது அதனை தொடர்ந்து சமூக விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டதில் இருந்து இது தொடர்பில் மக்கள் ஆர்வமாக உள்ளார்கள் தங்களது பகுதிக்கு 730 டோஸ்கள் வழங்கப்பட்டது இற்றை வரைக்கும் 694 டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

இது வரைக்கும் தடுப்பூசி பெற்றவர்கள் எந்தவித முறைப்பாடுகளையோ அல்லது பாதகமான விளைவுகள் தொடர்பிலோ எதுவும் முன்வைக்கவில்லை. எதிர் வரும் காலங்களில் கர்ப்பிணித் தாய்மார்களும் இதனை அச்சமில்லாமல் பெற்றுக் கொள்ளவும் இதய நோய், நீரிழிவு, சர்க்கரை வியாதி எதுவாக இருப்பினும் இத் தடுப்பூசி நடவடிக்கை அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

## கொவிட் தொற்று அதிகம் பாதிக்கப்பட்ட கிண்ணியாவுக்கு நிதியுதவி



அவுஸ்ரேலியா நிவ் சவுத் வெல்ஸ் மாணிலத்தில் இயங்கிவரும் அவுஸ்ரேலியா இலங்கை முஸ்லிம் சம்மேளனம்(ALMA) நிறுவனத்தின் ஊடாக இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள கொவிட்-19 காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்ட திருகோணமலை கிண்ணியா பகுதிகளுக்கு உதவும் வகையில் 7,இலட்சத்து 15 ஆயிரம் ரூபா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிதி கிண்ணியா ஜம்மியத்துல் உலமா மற்றும் கிண்ணியா அனர்த்த நிதியத்திற்கு பொறுப்பாளரிடம் (ALMA) நிறுவனத்தினர் வழங்கி வைக்கப்பட்டது.

## கிராமிய பாலமும் பீசிஆர் இயந்திரமும்

(இஃஜாஸ்.ஏ.பரீட்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் மூலம் கிராமிய பாலங்கள் அடையாளப்படுத்தியதில் வெள்ளைமணல் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள ஜனசவிய வீதி பாலம் மற்றும் முத்துநகர் கப்பல்துறையினை இணைக்கும் பாலத்தினையும் அமைப்பதற்கு பிரதேச சபையின் தீர்மானத்துடன் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.முகம்மட் நௌபார் தெரிவித்தார்.

அதற்கான மதிப்பீட்டு அறிக்கையும் தயாரித்து உரிய அமைச்சர்களிடமும் கோரிக்கையினை எழுத்துமூலம் முன்வைத்துள்ளோம்.

தற்பொழுது அதே பாலங்களினை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இன்று மதிப்பீடு செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் சமூகம் அளித்துள்ளார்.

இதில் எமக்கும் எமது பகுதி மக்களுக்கும் கேள்விகளும் சந்தேகங்களும் எழுகின்றது.

பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதில் எத்தனையோ அமைக்கப்பட வேண்டிய பாலங்கள் உள்ளது.

நாங்கள் தெரிவு செய்து மதிப்பீடு செய்து உரிய அதிகாரிகளிடம் இருந்து எமக்கு அந்த வேலைகளுக்கான அனுமதி வழங்க முன்பு கௌரவ பாராளுமன்ற உறுப்பினரினால் இந்த முன்னெடுப்புகள் நடைபெறுகிறதா ?

அல்லது திருகோணமலை மாவட்டத்தில் யார் முயற்சி செய்தாலும் என்ன நடந்தாலும் அந்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் தன்னுடைய பெயரினை பதித்து கொள்ள விரும்புகிறாரா?

திருகோணமலை மாவட்டத்திலேயே பீ.சிஆர் இயந்திரம் ஒன்று இல்லாமையினால் கடந்த சில வாரங்களுக்கு முன்பு இருந்தேதிருகோணமலை மாவட்ட பொது வைத்திய சாலைக்கு பீ.சி.ஆர் இயந்திரத்தின் தேவைகள் உள்ளமையினால் அதை பெற்றுக் கொடுப்பதற்கு பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் அனர்த்த நிதியில் இருந்தும் சங்கங்கள் மற்றும் நிறுவனகள் தனவந்தர்கள் நன்கொடையாளர்களின் மூலமும் நிதியினை திரட்டி இயந்திரத்தினை பெற்றுக்கொடுப்பதற்கு எமது பிரதேச சபையின் மூலம் முயற்சி எடுத்து வருகின்றோம்.

அதே பாராளுமன்ற உறுப்பினர் தன்னுடைய முயற்சியிலும் பீ.சி.ஆர் இயந்திரம் ஒன்று திருகோணமலை மாவட்டத்திற்கு கிடைக்க உள்ளது என்றும் முகநூல் வாயிலாக அறிய கிடைத்த செய்தியின் மூலம் எமக்கு பீ.சி.ஆர் இயந்திரம் பெற்றுக்கொள்வதற்கு நிதி வழங்க முன் வந்த சிலர் பின் வாங்கிக்கொண்டனர்.

இருந்த போதிலும் விரைவில் பீ.சி.ஆர் இயந்திரம் பெற்றுக்கொடுக்க முயற்சிகள் நடைபெறுகின்றது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களே நீங்கள் இந்த மாவட்டத்தின் கௌரவத்துக்குரியவர். உங்களுடைய முயற்சியின் மூலம் பல முன்னெடுப்புகள் நடைபெறுகிறது, நடக்கலாம் அதை நாம் வரவேற்கிறோம். ஆனால் அனைத்தும் உங்களுடைய முயற்சி என்று நீங்கள் சொல்வது தான் வேடிக்கையாக இருக்கின்றது.

யார் எந்த வேலைகளும் முன்னெடுத்தாலும் அனைத்திலும் உங்களுடைய பெயர் பொறிக்கப்பட நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என்றால் நாங்கள் இன்னும் சில வாரங்களில் குடாக்கரை பகுதில் உள்ள சில கிராம அபிவிருத்தி சங்கம் மூலம் கிரவல் வீதிகள் செப்பனிட உள்ளோம்.

அதனையும் நீங்கள்தான் கொண்டு வந்தது என்று சொல்ல எமது பகுதில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர்களை தொடர்பு கொள்ளவும் எனவும் தெரிவித்தார்.

## மட்டு.பிறண்டெக்ஸ் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசி ஏற்றல்



(ரீ.எல். ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு மாவட்டததிலுள்ள மிகப்பெரிய ஆடைத்தொழிற்சாலையான தாளங்குடா பிறண்டெக்ஸ் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு நேற்று கொரோனா தடுப்பூசகள் வழங்கப்பட்டன..சுமார் 500 பேர் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டதாக மாவட்ட சுகாதார சேவைகள் பணியகம் தெரித்துள்ளது.

குறித்த ஆடைத் தொழிற்சாலையில் 3000த்திற்கும் அதிகமான ஊழியர்கள் கடமை புரிகின்றனர்.அண்மையில் ஏற்பட்ட கொரோனா தொற்றையடுத்து நூற்றிற்கும் மேற்பட்ட ஊழியர்கள் கொரோனா தொற்றிற்கு இலக்காகினர்.இதனால் ஆடைத் தொழிற்சாலை இரு வாரகாலம் வரை மூடப்பட்டிருந்தது.

இத்தொழிற்சாலை ஊழியர்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. மாவட்டத்தில் பயணத்தடையை மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை; நகரங்களில் பொலிஸார் கடும் சோதனை

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயணத்தடை கடுமையாக அமுல் படுத்தப்பட்டு வருகின்றது

மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பொலிஸ் பிரிவுகளிலும் பொலிசாரும் இராணுவத்தினரும் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அத்தியவசிய தேவைகள் தவிர ஏனைய வாகனங்கள் பொலிசாரினால் திருப்பி அனுப்பப்படுகின்றன.இன்று காலை மட்டக்களப்பு நகரிலும் ஏனைய இடங்களிலும் பொலிசார் அதிகமான இடங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

அதிகளவிலான பொலிசாரும் இராணுவத்தினரும் 24 மணிநேர கண்காணிப்பு நடவடிக்கைகளில் இடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## மட்டு போதனா வைத்தியசாலைக்கு ஒட்சிசன் வழங்கும் உபகரணம் கையளிப்பு

(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் கொரோனா நிலைமை காரணமாக மட்டு போதனா வைத்தியசாலையில் இன்னும் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களுள் 20 பேர் ஒட்சிசன் தேவையுடையோராக காணப்படுகின்றனர்.

இதன் நிமித்தம் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வைத்திய சாலைக்கு கொரோனா சிகிச்சையளிப்புக்கான முக்கிய வைத்திய உபகரணங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

இதேவேளை மொரட்டுவ பல்கலைகழகத்தின் 93ம்ஆண்டு பிரிவு மாணவர்கள் சிலோன் கொலிஜ் நிறுவனத்தின் ஊடாக 20 இலட்சம் ருபா பெறுமதியான ஒட்சிசன் வழங்கும் உபகரணம் வைத்தியசாலைக்கு கையளிக்கும் நிகழ்வு மட்டு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய நிபுணர் திருமதி.க.கலாரஞ்சினி தலைமையில் இடம்பெற்றது.



இந் நிகழ்வில் மட்டு போதனா வைத்தியசாலை உயர் அதிகாரிகள் மொரட்டுவ பல்கலைகழக 93ம்ஆண்டு பிரிவு மாணவ பிரதிநிதிகள் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கல்முனையில் தடுப்பூசி வழங்க ஏற்பாடுகள் மும்முரம்

## : கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி

**(எம்.எம். ஜெஸ்மின், நூருள் ஹுதா உமர்)**

நாட்டில் வேகமாக பரவி வரும் கொரோணா அலையை கட்டுப்படுத்தும் நோக்கில் அரசினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு கட்டமாக கல்முனை பிரதேச மக்களுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஒன்று விரைவில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் ஏற்பாட்டில் மூன்று கட்டங்களாக மருதமுனை, கல்முனை, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் நடைபெற உள்ளதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர். எம். அஸ்மி தெரிவித்தார்.



தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், மேலும் இங்கு கருத்து வெளியிடும் போது, இந்த தடுப்பூசிகள் முதல் கட்டமாக 60 வயதுக்கு மேற்பட்ட நீரிழிவு நோயாளிகள், தேவைப்பாடு உள்ள கர்ப்பிணி தாய்மார், அரச திணைக்களங்கள், பிரதேச செயலகம் மற்றும் மாநகர சபையில் கடமையாற்றும் மக்களுடன் நேரடி தொடர்பு கொண்டுள்ள உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கே முன்னுரிமை கொடுத்து இந்த தடுப்பூசியை வழங்க உள்ளதாகவும் அடுத்தடுத்த கட்டங்களில் ஏனைய வகையினருக்கும் வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

மேலும் கல்முனை பிரதேசத்தில் தொற்றாளர்களை கட்டுப்படுத்த சுகாதாரத்துறை அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவதாகவும் பொதுமக்கள் இந்த பெருந்தொற்றை கட்டுப்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், சுகாதார நடைமுறைகளை பேணுவதுடன் சட்டங்களை மதித்து நடக்குமாறும் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

# கடற்கரையோரங்களில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள் தாவரங்களை அகற்ற கோரிக்கை



**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்ட கடற்கரையோரங்களில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள் தாவரங்கள் அதிகளவாக தென்படுவதை காண முடிந்தது.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இவ்வாறான கழிவுகள் அதிகளவாக கடற்கரையில் நிறைந்து காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு முதல் கல்முனை உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான கழிவு அடையாளங்கள் தென்பட்டுள்ளன.

இவ்வாறான கழிவு பரவலானது கரையோர மீனவர்களது மீன்பிடி தொழிலுக்கு பெரும் சிரமங்களை கொடுப்பதுடன் வலைகளிலும் சிக்கி வருகின்றன.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என பாதிக்கப்பட்ட மினவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# கொவிட் - 19 மூன்றாம் அலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதியும், பணமும்!





**(பைஷல் இஸ்மாயில்)**

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 மூன்றாம் அலையில் பாதிக்கப்பட்ட அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் அன்றாட கூலி வேலைக்குச் சென்று வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் இன்று வழங்கி வைத்தார்.

திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ப.மோகனகாந்தனின் வேண்டுகோளுக்குமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனினால் ஏற்பாட செய்து மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள வறுமையில் காணப்படும் சுமார் 30 குடும்பங்களுக்கு தலா 3000 ரூபாய் பெறுமதியான நிவாரணம் பொதிகளும் 1000 ரூபாய் பணமும் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# தாயக உறவுகளின் பசியைப்போக்க தனது பிறந்த நாள் பரிசாக 10 லட்சம் ருபா!

**(வி.ரி.சகாதேவராஜா)**

தொடரும் பயணத்தடை மற்றும் கொரோனா காரணமாக பாதிக்கப்பட்ட தாயகஉறவுகளின் பசியைப்போக்க தனது பிறந்த நாள்பரிசாக 10லட்சருபாவை வழங்கியுள்ளார் ஒரு பரோபகாரி. அவர்தான் இலங்கையைச்சேர்ந்த கனடாவில் வாழ்ந்துவரும் மனோகரன் சுப்பிரமணியம் என்பார்.

குறிப்பாக அவர்வழங்கிய 1மில்லியன் ருபா (10லட்சருபா) நிதியைஅம்பாறை மாவட்டத்தைச்சேர்ந்த 500குடும்பங்களுக்கு தலா 2000ருபா வீதம் 500 உலருணவு நிவாரணப்பொதிகளை வழங்கிஉதவுமாறு மாவட்டத்தின் பிரபல சமுகசெயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலிடம் கேட்டுக்கொண்டிருந்தார்.

அதற்கிணங்க அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய திருக்கோவில் பெருநிலப்பரப்பில் சமகால கொவிட் தாக்கத்தினாலும் பயணத்தடையினாலும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தையிழந்த ஒரு தொகுதி மக்களுக்கு உலருணவு நிவாரணம் நேற்று வழங்கப்பட்டது.




திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் விடுத்தவேண்டுகோளையேற்று பிரபல சமுகசெயற்பாட்டாளர் கி.ஜெயசிறில் இந்நிவாரணத்தை வழங்கிவைத்தார்.

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள மண்டானை காயத்திரிகிராமம் குடிநிலம் வினாயகபுரம் பாலக்குடா திருக்கோவில் ஆகிய கிராம மக்களுக்கென உலருணவு நிவாரணப்பொதிகளை சமுகசேவையாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் 200 உலருணவுப் பொதிகளை நேற்று வழங்கிவைத்தார்.

நிகழ்வில் உதவிபிரதேச செயலாளர் க.சதீஸ் சமுகசெயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா உதவிதிட்டமிடல் பணிப்பாளர் செல்வி எம்.அனோஜா உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

பயனாளிகள் கருத்துரைக்கையில் கனடாவில் வதியும் மனோகரன் சுப்பிரமணியத்திற்கு நீண்டஆயுள்கிடைக்கவேண்டுமென பிறந்தநாள் வாழ்த்தும் நன்றியும் தெரிவிக்கின்றஅதேவேளை அதனை இங்கு பெற்றுத்தந்த தவிசாளர் ஜெயசிறில் ஐயாவுக்கும் நன்றிகள் என்று கூறினர்.

எமது கிராம மக்களுக்காக முதன்முதலில் சமுகசெயற்பாட்டாளர்களான தவிசாளர் கி.ஜெயசிறில் உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் உயிரைத் துச்சமென மதித்து காரைதீவிலிருந்து இங்குவந்து இவ்வுதவியை எமக்கு வழங்கிவைத்தமைக்காக எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்என பிரதேசசெயலாளர் கஜேந்திரன் அங்கு நன்றிகூறினார்.

# கொவிட்-19 தடுப்பூசி வழங்குவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கை!



**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன் றிசாடின் வேண்டுகோளுக்கிணங்க பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம். பைசல் அவர்களின் தலைமையில் நேற்று இரவு ஒலிபெருக்கியில் கொவிட்-19 தடுப்பூசி வழங்குவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கை சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

இந்த தடுப்பூசியானது முதற்கட்டமாக 60 வயதை தாண்டியவர்கள் மற்றும் பொது மக்களுடன் கள நேரடி தொர்பினை வைத்திருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு வழங்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ் விழிப்புணர்வு நிகழ்வில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இணைப்பு செய்யப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தி பயிலுநர்களும் கலந்து கொண்டனர்.